

மதுரையில் நேற்று, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலை யில், திருப்பரங்குன்றம் தொகுதியைச் சேர்ந்த அ.தி.மு.க. நிர்வாகிகள் பத்துக்கும் மேற்பட்டோர் அக்கட்சியிலிருந்து விலகி தங்களை கழகத்தில் இணைத்துக் கொண்டனர். அவ்வாறு கழகத்தில் இணைந்தவர்க ளில், அ.தி.மு.க. திருப்பரங்குன்றம் கிழக்குப் பகுதிச் செயலாளர் வழக்கறிஞர் M.ரமேஷ், திருப்பரங்குன்றம் நிலையூர் ஒன்றியச் செயலாளர் நிலையூர் முருகன், மாவட்ட வழக்கறிஞர் பிரிவுச் செயலாளர் வழக்கறிஞர் R. சேதுராமன், மாவட்ட வழக்கறிஞர் பிரிவு இணைச் செயலாளர் வழக்கறிஞர் M. ஜெய பிரசன்னா, திருப்பரங்குன்றம் விவசாயப் பிரிவுச் செயலாளர் P.பாண்டி, மாவட்ட இலக்கிய அணிச் செயலாளர் கவிஞர் P.மோகன்தாஸ் உள்ளிட்டோர் இடம்பெற்றிருந்தனர். மாவட்டச் செயலாளர்கள் பி.மூர்த்தி, சேடப்பட்டி மு. மணிமாறன் ஆகியோர் உடன் உள்ளார்கள்.

தூத்துக்குடியில்

முத்துராமலிங்க தேவர் சிலைக்கு மரியாதை!

முன்னாள் அமைச்சர் பி.கீதாஜீவன், மேயர் ஜெகன் பெரியசாமி மாலை அணிவித்தனர்

தூத்துக்குடி, அக். 31 –

தூத்துக்குடி பசும்பொன் முத்துராமலிங்க தேவர் 119வது ஜெயந்தி விழாவையொட்டி 3ம் மைல் பகுதியில் அமைந்துள்ள தேவர் சிலைக்கு வடக்கு மாவட்ட திமுக செயலாளரும் முன்னாள் அமைச்சருமான கீதா ஜீவன், மேயர் ஜெகன் பெரியசாமி ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செய்தனர்.



விழாவில் மாநகர செயலாளர் ஆனந்தசேகரன், மாவட்ட துணைச் செய லாளர் ராஜ்மோகன் செல்வின், மாநில பொறியாளர் அணி துணை செயலாளர் அன்பழகன், மண்டலத் தலைவர் வக்கீல் பாலகுருசாமி, மாநகர துணைச் செயலாளர்கள் கீதாமுரு கேசன், கனகராஜ், மாவட்ட அணி நிர்வாகிகள் கவிதாதேவி, பிரபு, அருண்குமார், குபேர்இளம்பரிதி, பகுதி செயலாளர்கள் ஜெயக்குமார், மேகநாதன், சுரேஷ்குமார், ரவீந்திரன், கவுன்சிலர்கள் சரவணக்குமார், கண்ணன், இசக்கிராஜா, சந்திரபோஸ், ரெங்கசாமி பொன்னப்பன், விஜயகுமார், மாவட்ட பிரதிநிதிகள் நாராயணன், ஏசுவடியான், பாலசுப்பிரமணியன், மாநகர அணி நிர்வாகிகள் ஜீவன்ஜேக்கப், முருகஇசக்கி, சக்திவேல்,நைஸ்பரமசிவம் சாகுல்ஹமீது, சங்கரநாராயணன், ரவி, ஆனந்தசேகர், சத்யா, செந்தில்குமார், பகுதி அணி அமைப்பாளர்கள் சுரேஷ்குமார், வட்டச்செயலாளர்கள் செல்வராஜ், சிங்கராஜ், கதிரேசன், சுப்பையா, சுரேஷ், பொன்பெருமாள், சதீஷ்குமார், முக்கையா, டென்சிங், கருப்பசாமி, பாலகுருசாமி, கங்காராஜேஷ், செந்தில்குமார், வட்டப்பிரதிநிதிகள் பாஸ்கர், புஷ்பராஜ், மின்வாரிய தொழிற்சங்க தலைவர் பேச்சிமுத்து, போல்பேட்டை பகுதி பிரதிநிதிகள் பிரபாகர், ஜேஸ்பர், மற்றும் முரளிதரன், மணி, செல்வம், ஐயப்பன், சீனிவாசன், நாராயணன், ஆகாஷ், ரேவதி, அற்புதராஜ், சின்னக்காளை சேகர், உள்பட பலர் கலந்து கொண்டனர்.

பாக்ஸ்: தேவருக்கு கீதாஜீவன் புகழாரம்

தேவர் மகாசபை சார்பில் முன்னாள் அமைச்சர் கீதாஜீவன் ஜெகன் பெரியசாமியை வரவேற்ற பின்னர் கீதாஜீவன் பேசுகையில் முத்துராமலிங்க தேவர் நாட்டிற்காக தன்னை முழுமையாக அர்ப்பணித்துக்கொண்டு வாழ்நாள் முழுவதும் தேசியமும் தெய்வீகமும் தனது கொள்கையாக கொண்டு முழுமையாக வாழ்ந்தவர் அவரது வழித்தோன்றல்கள் இன்றைய தினம் விழா எடுத்து எல்லா தரப்பினரையும் இங்கு வருகை தந்து தேவர் திருமகனுக்கு அனைவரும் பெருமை சேர்த்து வருகின்ற நிலையில் திமுக சார்பில் கலந்து கொண்டு மரியாதை செலுத்தியதில் மகிழ்ச்சியடைவதோடு எங்களை வரவேற்ற அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன் என்று பேசினார்.

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம் – மாநகர – ஒன்றிய –

நகர - பகுதி - பேரூர் கழக செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் ரெ.மகேஷ் தலைமை!

கன்னியாகுமரி, அக். 31 –

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டமானது மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் ரெ.மகேஷ் தலைமையில் 29.10.2026, வியாழக் கிழமை அன்று மாலை 5.30 மணியளவில் நாகர்கோவில், ஒழுகினசேரியில் அமைந்துள்ள மாவட்ட தலைமைக் கழக அலுவலகத்தில் வைத்து நடைபெற்றது.



கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் ரெ.மகேஷ் தலைமை கழக அறிவிப்பின்படி, தற்போது தமிழ் நாட்டில் நிலவும் சட்டம் ஒழுங்கு சீர்கேடு, பெண்கள், குழந்தைகளுக்கு பாதுகாப்பின்மை மற்றும் விலைவாசி உயர்வு ஆகியவற்றை தடுக்க தவறிய ரீல்ஸ் த.வெ.க. அரசை கண்டித்து நடைபெறவுள்ள மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் தொடர்பாகவும், வருகின்ற உள்ளாட்சித் தேர்தலில் வெற்றி பெறும் வகையில் மேற்கொள்ள வேண்டிய களப் பணிகள் தொடர்பாகவும் நிர்வாகிகளுக்கு ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார்.

ஆலோசனைக் கூட்டத்தில் மாநில தி.மு.க. மகளிர் அணி செயலாளர் ஜெ.ஹெலன் டேவிட்சன்., ஒன்றிய கழக செயலாளர்கள் எம். மதியழகன், பா.பாபு, த.செல்வன், ஏ.சுரேந்திரகுமார், ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் ச.சுந்தர்சிங், ஜெ.மிலன், நகர கழக செயலாளர் குமரி ஸ்டீபன், பகுதி கழக செயலாளர்கள் இ.ஜவகர், என்.பி.துரை, மு.சேக்மீரான் உட்பட பேரூர் கழக செயலாளர்கள் கலந்து கொண்டனர். கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தீர்மானம்: 1 தற்போது நடைபெற்று வரும் த.வெ.க. அரசின் சட்டம் ஒழுங்கு சீர்கேட்டை திசை திருப்பும் வகையிலும், அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாகவும், முன்னாள் அமைச்சர்கள் மற்றும் நிர்வாகிகள் மீது நடவடிக்கை எடுத்து வரும் ரீல்ஸ் த.வெ.க. அரசையும், காவல் துறையையும் இக்கூட்டம் வன்மையாக கண்டிக்கிறது.

தீர்மானம்: 2 கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி, கழக இளைஞர் அணி செயலாளர், சட்ட மன்ற எதிர்கட்சித் தலைவர் உதய நிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி, அமைதி பூங்காவாக திகழ்ந்த தமிழ்நாட்டில் தற்பொழுது நிலவும் ரீல்ஸ் ஆட்சியால் சட்டம் ஒழுங்கு சீர்கேடு, பெண்களுக்கு எதிரான வன்முறை, குழந்தைகளுக்கு பாதுகாப்பின்மை மற்றும் விலைவாசி உயர்வு போன்றவற்றால் பொதுமக்கள் தினந்தோறும் அவதிப்படும் நிலைமையை உண்டாக்கிய த.வெ.க. அரசை கண்டித்து கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட மகளிர் அணி சார்பில் வருகிற 31.10.2026, சனிக்கிழமை அன்று காலை 10.00 மணிக்கு நாகர்கோவில், அண்ணா விளையாட்டு அரங்கம் அருகில் வைத்து நடைபெறவிருக்கின்ற மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு கன்னியாகுமரி கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்டம், கிளை கழக மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டர் அணி நிர்வாகிகள், மகளிர்கள், பொதுமக்கள் ஆகியோரை பெருமளவில் கலந்து கொள்ள செய்வது என இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

தீர்மானம்: 3 இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின் படி 01.01.2027ஐ தகுதி ஏற்படுத்தும் நாளாக கொண்டு நடைபெறவுள்ள புகைப்பட வாக்காளர் பட்டியல்கள் சிறப்பு சுருக்கமுறை திருத்த பணிகளில் 18 வயது பூர்த்தியானவர்கள் மற்றும் 17 வயதிற்கு மேற்பட்ட இளைஞர்களையும், இளம் பெண்களையும் சேர்ப்பதற்கும், வாக்காளர் பட்டியலில் இது வரை இடம் பெறாதவர்களின் பெயர்களையும், புதிதாக குடி வந்தவர்களின் பெயர்களை சேர்ப்பதற்கும், ஒரு நபரின் பெயர் ஒன்றிற்கு மேற்பட்ட இடத்தில் இருந்தால் அதனை நீக்கவும், இறந்தவர்களின் பெயர்களை நீக்கவும், வாக்காளர் பட்டியலில் உள்ள தவறுகளை சரி செய்வது உள்ளிட்ட பணிகளை அந்தந்த வாக்குச்சாவடிக்குரிய வாக்குச்சாவடி முகவர்கள், தங்களை முழுமையாக ஈடுபடுத்திட வேண்டும் எனவும், மேலும் சிறப்பு முகாம் நடைபெறும் நாட்களில் மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பேரூர், பகுதி, கிளை, வார்டு மற்றும் வட்ட கழக செயலாளர்கள் உள்ளிட்ட கழகத்தின் பல்வேறு நிலைகளில் பணிபுரிந்து வரும் நிர்வாகிகளும், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகளும், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகளும், கழக உடன் பிறப்புகளும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த இப்பணியில் தனிக்கவனம் செலுத்த வேண்டும் என இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

தீர்மானம்: 4 வருகின்ற உள்ளாட்சி மன்ற தேர்தலில் தி.மு.க. தனித்து நின்றாலும், மாபெரும் வெற்றி பெறும் வகையில் எந்தவித கருத்து வேறுபாடின்றி கன்னியாகுமரி கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட நாகர்கோவில் மாநகராட்சி மற்றும் நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி, வார்டுகளில் தி.மு.க. மாபெரும் வெற்றி பெற்று சாதனை படைத்திட இன்றே தீவிர களப் பணியாற்றிட வேண்டும் என இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.



பஹ்ரைன் சென்றுள்ள, மாநிலங்களவை கழக உறுப்பினர் திருமதி ராஜாத்தி சல்மா, பஹ்ரைனில் அந்நாட்டிற்கான இந்தியத் தூதர் டாக்டர் பிரதீப்ராஜ் புரோகித் அவர்களை மரியாதை நிமித்தமாகச் சந்தித்து உரையாடினார். பாரதி தமிழ் சங்கத்தின் தலைவர் வல்லம் பஷீர், அப்துல் கய்யூம் ஆகியோர் அப்போது உடனிருந்தனர்.



நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் பசும்பொன் முத்துராமலிங்க தேவர் அவர்களின் ஜெயந்தி விழா முன்னிட்டு நெல்லை சந்திப்பில் அமைந்துள்ள பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ. தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில் கழக நிர்வாகிகள் வி.கே.முருகன், பேச்சிபாண்டியன், விஜிலா சத்யானந்த், சுரேஷ், தர்மன், ராஜு, அருள்மணி, துபாய் சாகுல், சாமுவேல், நமச்சிவாயம், சுப்பிரமணியன், சங்கர், தினேஷ், அனிதா, பேபி கோபால் உள்ளிட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.

தன் வாழ்நாளில் பெரும் பகுதியை சிறையிலே கழித்த தியாகத்துக்குச் சொந்தக்காரர்!

பசும்பொன் தேவர் திருமகனாருக்கு – சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் புகழாரம்!



சென்னை, அக். 31 -

பசும்பொன் தேவர் அவர்களின் குருபூஜை நாளான நேற்று, சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் விடுத்த வலைதளப் பதிவில், "தன் வாழ்நாளின் பெரும் பகுதியை சிறையிலே கழித்த தியாகத்துக்குச் சொந்தக்காரர், பசும்பொன் தேவர் திருமகனார் அவர்கள்!" என்று புகழாரம் சூட்டியுள்ளார்.

அவரது வலைதளப் பதிவு வருமாறு:


நாட்டு விடுதலைக்காகப் போராடிய பசும்பொன் திருமகனார் அவர்களின் பிறந்த நாள் இன்று.

குற்றப்பரம்பரைச் சட்டம் வாய்ப்பூட்டுச் சட்டம் போன்ற அடக்குமுறைகளை எதிர்த்துப் போராடியவர். தன் வாழ்நாளில் பெரும்பகுதியை சிறையிலே கழித்த தியாகத்துக்குச் சொந்தக்காரர்.

அரசியல் இயக்கத்தின் தலைவராகவும் மக்கள் பிரதிநிதியாகவும் அவர் ஆற்றிய பணிகள் என்றென்றும் நிலைத்திருக்கும்.

இவ்வாறு அப்பதிவில் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

ஆண்டியும் போண்டியும்



ஆண்டி : ஏன்யா; ஒரு சினிமாவிலே 'கிணத்தை காணோம்'ன்னு ஒரு சீன் இருக்கும். அது மாதிரி இந்த ஆட்சியிலே. 'தடுப்பணையே காணோம்'ன்னு சொல்றாங்களே, கேள்விப்பட்டியா?

போண்டி : ஆமாய்யா; கேள்விப்பட்டேன். கோவைக்கு அருகே காரமடை பகுதியிலே ஒரு தடுப்பணையை காணோமாம். த.வெ.க. ஆதரவாளர் ஒருவர்தான் ரியல் எஸ்டேட் பிசினஸ்சுக்காக அதை சமப்படுத்திட்டாருன்னு. சொல்றாங்க. உண்மையான்னு தெரியலை, அதிகாரிகளைக் கேட்டா, விசாரணை நடக்குதுங்குறாங்க. இது எப்படி இருக்கு?

சந்தி சிரிக்கும் சட்டம் – ஒழுங்கு!

செயலற்ற விஜய் ஆட்சியில் கொலை, கொள்ளைகள்!

(29.10.2026)



1. சிவகங்கை மாவட்டம், மானாமதுரை அருகே ஓய்வு பெற்ற விடுதி வார்டன் தனியாக இருந்தபோது கழுத்தை அறுத்து கொலை செய்து 8 சவரன் நகை கொள்ளை .

2. தூத்துக்குடி மாவட்டம் சாத்தான்குளம் அருகே காதல் விவகாரத்திற்கு எதிர்ப்பு தெரிவித்த தந்தை வீடு புகுந்து சரமாரியாக வெட்டி கொலை.

3. நெல்லை தச்சநல்லூர் வாலாஜாபேட்டை அருகே பிறந்த பச்சிளம் ஆண் குழந்தையை கொலை செய்து , பிணம் சாக்கடையில் வீச்சு, பரபரப்பு .



4. தர்மபுரி மாவட்டம் பனந்தோப்பு அருகே புகாரின் பேரில் பெண்ணை அழைத்து, அசிங்கமாக திட்டி, தாலி செயினை அவிழ்த்து துன்புறுத்திய இன்ஸ்பெக்டர், அவமானப்பட்டதால் விஷம் குடித்த பெண் .

5. சென்னை அடுத்த அம்பத்தூரில் ஏழு வயது சிறுமிக்கு பாலியல் தொல்லை கொடுத்த வடமாநில ஆசாமி சிக்கினான்.

6. கன்னியாகுமரி மாவட்டம் மார்த்தாண்டம் அருகே கழுவன்திட்டை பகுதியில் 17 வயது சிறுமியிடம் ஆசை வார்த்தை கூறி சில்மிஷம் செய்து வீட்டிலிருந்து 145 பவுன் நகையை அபேஸ் செய்த வாலிபர் .



7. தஞ்சாவூர் அருகே மடிகையில் 17 வயது இளம் பெண்ணுக்கு பாலியல் தொல்லை கொடுத்த கூலித் தொழிலாளி சிக்கினார் .

8. சென்னை மீனம்பாக்கத்தில் உள்ள தனியார் கல்லூரியில் மாணவர்களுக்குள் அடிதடி, உருட்டு கட்டைகளால் தாக்கிக் கொண்டதால் பரபரப்பு .

9. சென்னை ஆதம்பாக்கத்தில் தனியார் பள்ளி விடுதியில் தங்கி படிக்கும் பிளஸ் ஒன் மாணவியை உடல் ரீதியாக துன்புறுத்திய இரண்டு பெண் வார்டன்கள் சிக்கினர்.

10. ஊழலற்ற ஆட்சி என்ற முழக்கம் கேலிக்கூத்தானது. கிராமப்புற வேலைவாய்ப்பு திட்டம் பணிகளுக்கு த.வெ.க. எம்.எல்.ஏ.க்கள் 20 சதவீத கமிஷன் கேட்பதாக ஒப்பந்ததாரர்கள் புகார் .

11. சென்னை தங்க சாலையில் இருந்து செங்குன்றம் செல்லும் மாநகரப் பேருந்தை வியாசர்பாடி மார்க்கெட் அருகே வழிமறித்து பேருந்து ஓட்டுநரை சரமாரியாக தாக்கிய ஆட்டோ ஓட்டுனர் சிக்கினார் .